

பரிசுத்த பர்வதங்களில் இருக்கிறது

Glorious Things Are Spoken of You, O Zion

Album 22 Song 6

87 சங்கீதம்

பரிசுத்த பர்வதங்களில் இருக்கிறது
எந்தன் கர்த்தருடைய அஸ்திபாரம்
சீயோனின் வாசல்களில் பிரியமானார்
தேவனின் நகரமே மகிமையானது

தேவனின் நகரமே கர்த்தரின் மகிமையே
பரிசுத்த பர்வதமே கர்த்தரின் அஸ்திபாரமே
சீயோனின் வாசலே கர்த்தரின் பிரியமே
எங்கள் ஊற்றுகளெல்லாம் உன்னில் இருக்கிறது

இன்னான் எங்கே பிறந்தான் என்று தேவன் அறிவார்
கர்த்தரே ஜனங்களின் பெயர்களை எழுதுவார்
இன்னான் இன்னான் சீயோனில் பிறந்தான் - என்று
அவர்களை கர்த்தரே தொகையிடுவார்

தேவனின் நகரமே கர்த்தரின் மகிமையே
பரிசுத்த பர்வதமே கர்த்தரின் அஸ்திபாரமே
சீயோனின் வாசலே கர்த்தரின் பிரியமே
எங்கள் ஊற்றுகளெல்லாம் உன்னில் இருக்கிறது

உன்னதமானவர் பிறப்பை ஸ்திரப்படுத்துவார்
பாபிலோனியரையும் குறித்துப் பேசுவார்
புறஜாதியாரிலுங்கூட பெயர் சொல்லி பிறப்பைக் கூறுவார்
எங்கள் சந்ததிகளெல்லாம் கர்த்தரில் இருக்கிறது

தேவனின் நகரமே கர்த்தரின் மகிமையே
பரிசுத்த பர்வதமே கர்த்தரின் அஸ்திபாரமே
சீயோனின் வாசலே கர்த்தரின் பிரியமே
எங்கள் ஊற்றுகளெல்லாம் உம்மில் இருக்கிறது

